# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## FIRST EXAMINATION IN DIPLOMA IN BUSINESS ADMINISTRATION – REPEAT (2003)
## DIPLOMA PROGRAMME - EXTERNAL
## DBA 103 FINANCIAL ACCOUNTING

LIBRARY
31 DEC 2003
Eastern University, Sri Lanka

சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.

கணித்தல் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது. நேரம் : 03 மணித்தியாலங்கள்

01. திரு. பாலசுப்பிரமணியம் என்னும் தனிவியாபாரியின் கணக்கேடுகளிலிருந்து 30.09.2003 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு :

| | | வரவு ரூபா. | செலவு ரூபா. |
|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் : | காணி கட்டடம் | 400,000 | |
| | தளபாடம் பொருத்திகள் | 100,000 | |
| | மோட்டார் வாகனம் | 300,000 | |
| | உபகரணம் | 80,000 | |
| 01.10.2002 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு : | | | |
| | காணி கட்டடம் | | 40,000 |
| | தளபாடம் பொருத்திகள் | | 20,000 |
| | மோட்டார் வாகனம் | | 108,000 |
| | உபகரணம் | | 15,200 |
| மூலதனம் | | | 520,000 |
| எடுப்பனவுகள் | | 48,000 | |
| 15% வங்கிக்கடன் | | | 100,000 |
| வங்கிக்கடன் வட்டி | | 7,500 | |
| வாடகை வரி, காப்புறுதி | | 21,000 | |
| மின்சாரம் | | 24,900 | |
| காகிதாதிகள் | | 3,600 | |
| விற்பனையாளர் சம்பளம் | | 44,000 | |
| அலுவலக சம்பளம் | | 24,000 | |
| மோட்டார் வாகனப் பராமரிப்பு | | 28,000 | |
| விற்பனைத் தரகு | | 24,000 | |
| விளம்பரம் | | 50,000 | |
| அறவிடமுடியாக் கடன் | | 4,000 | |
| பெற்ற கழிவு | | | 6,800 |
| கொடுத்த கழிவு | | 9,000 | |

| | | |
|---|---|---|
| வெளிச்சென்ற வண்டிக்கூலி | 37,000 | |
| உள்வந்த வண்டிக்கூலி | 21,000 | |
| கொள்வனவுத் திரும்பல் | | 30,000 |
| விற்பனைத் திரும்பல் | 40,000 | |
| கொள்வனவுகள் | 850,000 | |
| விற்பனைகள் | | 1500,000 |
| காசும் வங்கியும் | 44,000 | |
| 01.10.2002 இல் ஐயக்கடனுக்கான ஏற்பாடு | | 4,000 |
| கடன்கொடுத்தோர் | | 56,000 |
| கடன்பட்டோர் | 60,000 | |
| 01.10.2002 இல் இருப்பு | 130,000 | |
| 10% முதலீடுகள் | 50,000 | |
| | **2400,000** | **2400,000** |

மேலதிக தகவல்கள் :

i. 30.09.2003 இல் இருப்புக்கள் – ரூபா. 150,000.

ii. 30.09.2003 இல் சென்மதியாகவுள்ள செலவுகள் ;

| | |
|---|---|
| மின்சாரம் | ரூபா. 1,900 |
| வாடகை வரி | ரூபா. 6,000 |
| வங்கிக்கடன் வட்டி | ரூபா. 7,500 |

iii. முற்பணமாகச் செலுத்திய விளம்பரம் ரூபா. 6,000
பெறவேண்டிய முதலீட்டு வருமானம் ரூபா. 5,000

iv. கடன்பட்டோரிலிருந்து ரூபா. 4,000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிப்பு செய்யப்படல் வேண்டும். மிகுதிக்கடன்பட்டோரில் 10% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

v. நிலையான சொத்துக்கள் மீது பின்வருமாறு பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| காணி கட்டடம் | - ஆண்டுக்கு 5% கிரயத்தில் |
| தளபாடம் பொருத்திகள் | - ஆண்டுக்கு 10% கிரயத்தில் |
| மோட்டார் வாகனம் | - ஆண்டுக்கு 20% குறைந்து செல் மீதியில் |
| உபகரணம் | - ஆண்டுக்கு 10% குறைந்து செல் மீதியில் |

வேண்டப்படுவது :

30.09.2003இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக்கணக்கையும் அத்திகதியில் உள்ளவாறான ஐந்தொகையையும் தயாரிக்குக.

(30 புள்ளிகள்)

02. 30.09.2003 இல் முடிவுற்ற ஆண்டுக்கான டிஸ்கோ விளையாட்டுக் கழகத்தின் கொள்ளல் கொடுத்தல் கணக்கு பின்வருமாறு :

| கொள்ளல்கள் | ரூபா. | கொடுத்தல்கள் | ரூபா. |
|---|---|---|---|
| 01.10.2002 இல் காசு மீதி | 42,000 | மைதானப் பராமரிப்பு | 80,400 |
| அங்கத்தவர் சந்தா | 197,400 | மதுச்சாலை சம்பளம் | 24,000 |
| நுழைவுச்சீட்டு விற்பனை | 87,400 | காகிதாதிகள் | 5,200 |
| நன்கொடைகள் | 40,000 | பரிசுகள் | 63,600 |
| மதுச்சாலை கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு | 161,200 | காப்புறுதி | 4,800 |
| | | விளையாட்டு உபகரணம் | 50,000 |
| | | தளபாடம் | 100,000 |
| | | மதுச்சாலை கடன்கொடுத்தோருக்குச் செலுத்தியது | 80,000 |
| | | விளையாட்டுப்போட்டிச் செலவு | 33,600 |
| | | வருடாந்த பகல் போசனம் | 36,000 |
| | | 30.09.2003இல் காசு மீதி | 50,400 |
| | **528,000** | | **528,000** |

ஏனைய மீதிகள் பின்வருமாறு :

| | 30.09.2002 ரூபா. | 30.09.2003 ரூபா. |
|---|---|---|
| காணி கட்டடம் (புத்தகப் பெறுமதி) | 250,000 | 240,000 |
| தளபாடம் (புத்தகப் பெறுமதி) | 80,000 | 160,000 |
| விளையாட்டு உபகரணம் (புத்தகப் பெறுமதி) | 70,000 | 110,000 |
| சந்தா நிலுவைகள் | 9,000 | 7,000 |
| முற்பணச் சந்தா | 6,400 | 2,400 |
| மதுச்சாலை கடன்பட்டோர் | 25,000 | 30,000 |
| மதுச்சாலை கடன்கொடுத்தோர் | 16,000 | 13,000 |
| மதுச்சாலை இருப்பு | 15,000 | 18,000 |

வேண்டப்படுவது :

டிஸ்கோ விளையாட்டுக் கழகத்தின் பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. 01.10.2002 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

ii. 30.09.2003 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மதுச்சாலை வியாபாரக் கணக்கு.

iii. சந்தாக் கணக்கு.

iv. 30.09.2003 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு.

v. 30.09.2003 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

(25 புள்ளிகள்)

LIBRARY 21 DEC 2003 Sri La

திரு. கணபதிப்பிள்ளை என்னும் தனி வியாபாரி தனது கணக்கேடுகளை ஒழுங்காகப் பேணவில்லை. ஆயினும் 30.09.2003 இல் முடிவுற்ற நிதியாண்டுக்கான பின்வரும் தகவல்களை அவர் வழங்கக்கூடியவராக உள்ளார்.

ஆண்டுக்காலத்தில் இடம்பெற்ற காசுக் கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் :

| | ரூபா. |
|---|---|
| காசுக் கொள்வனவு | 75,000 |
| கடன்கொடுத்தோருக்குச் செலுத்தியது | 165,000 |
| சம்பளம் செலுத்தியது | 20,000 |
| விற்பனைச் செலவுகள் செலுத்தியது | 12,000 |
| வாடகை வரி செலுத்தியது | 3,500 |
| மின்சாரம் செலுத்தியது | 8,500 |
| காசு விற்பனைகள் | 123,000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு | 212,000 |
| தளபாடம் வாங்கியது | 25,000 |

ஏனைய தகவல்கள் :

| | 30.09.2002 | 30.09.2003 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| காணி கட்டடம் | 200,000 | 190,000 |
| தளபாடங்கள் | 60,000 | 80,000 |
| இருப்புக்கள் | 30,000 | 25,000 |
| கடன்பட்டோர் | 23,000 | 28,000 |
| கடன்கொடுத்தோர் | 17,000 | 14,000 |
| மின்கட்டணம் சென்மதி | 2,500 | 2,000 |
| முற்பண விளம்பரம் | 2,000 | 3,000 |
| காசுமீதி | 5,000 | 6,000 |

ஏனைய தகவல்கள் :

i. திரு. கணபதிப்பிள்ளை ஆண்டுக்காலத்தில் தனது தனிப்பட்ட தேவைக்காக வியாபாரத்திலிருந்து காசினைப் பற்றியதாகக் கூறுகின்றார். ஆனால் அதைப் பற்றிய கணக்குப் பதிவினை அவர் பேணவில்லை.

ii. காணி கட்டடம் மற்றும் தளபாடங்கள் மீதான ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு முறையே ரூபா. 10,000 வும் ரூபா. 5,000 வும் ஆகும்.

LIBRARY
31 DEC 2003
Eastern University, Sri Lanka

வேண்டப்படுவது :

திரு. கணபதிப்பிள்ளைக்காக பின்வருவனற்றைத் தயாரிக்குக.

i. காசுக் கணக்கு

ii. 30.09.2003 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக்கணக்கு.

iii. 30.09.2003 இல் உள்ளவாறான ஐந்தொகை (உங்கள் செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக.)

**(25 புள்ளிகள்)**

04. மணி, குமார், சிவா என்போர் இலாப நட்டங்களை 2 : 2 : 1 என்ற விகிதத்தில் பங்கு கொள்ளும் பங்காளராவர். 30.09.2003 இல் பங்குடமையின் பரீட்சை மீதி பின்வருமாறு :

| | | ரூபா. | | ரூபா. |
|---|---|---|---|---|
| மூலதனம் - | மணி | 200,000 | காணி கட்டடம் | 350,000 |
| | - குமார் | 200,000 | தளபாடம் | 150,000 |
| | - சிவா | 100,000 | இருப்புக்கள் | 100,000 |
| பொது ஒதுக்கம் | | 100,000 | கடன்பட்டோர் | 70,000 |
| கடன்கொடுத்தோர் | | 100,000 | காசு மீதி | 30,000 |
| | | **700,000** | | **700,000** |

01.10.2003 இலிருந்து நாதன் என்பவரை தமது பங்குடமையில் அனுமதிப்பதற்கு பங்காளர்கள் இணங்கிக் கொண்டனர். நாதனின் இலாபநட்டப் பங்கு 1/6 ஆகும். அவர் ரூபா. 100,000 மூலதனத்தைக் காசாகக் கொண்டு வந்தார். பழைய பங்காளர்களின் இலாப நட்ட விகிதம் மாறாமல் பேணப்பட்டது. புதிய பங்காளர் சேர்ந்த திகதியில் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா. 60,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டது.

நன்மதிப்புக்கு கணக்கு எதுவும் திறக்காமல் பங்காளர் மூலதனக் கணக்கினூடாகச் செம்மையாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் அத்திகதியில் பின்வரும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன.

| | ரூபா. |
|---|---|
| காணி கட்டடம் | 460,000 |
| தளபாடம் | 140,000 |
| இருப்புக்கள் | 90,000 |
| கடன்பட்டோர் | 60,000 |

வேண்டப்படுவது :

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. நிரல் முறையில் பங்காளர் மூலதனக் கணக்குகள்.

ii. சொத்து மீள்மதிப்பீட்டுக் கணக்கு.

iii. 01.10.2003 இல் உள்ளவாறான ஐந்தொகை.

**(20 புள்ளிகள்)**